# பெப்ரவரி– 25 – தவக்கால02ம் ஞாயிறு

**“என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவருக்குச் செவிசாயுங்கள்” (மாற்.9:7**

## முதல் வாசகம் : தொடக்க நூல் 22: 1 – 2, 9 – 13

அந்நாட்களில், கடவுள் ஆபிரகாமைச் சோதித்தார். அவர் அவரை நோக்கி, ஆபிரகாம்! என, அவரும் ”இதோ! அடியேன்” என்றார். அவர், ”உன் மகனை, நீ அன்பு கூரும் உன் ஒரே மகனான ஈசாக்கை அழைத்துக்கொண்டு மோரியா நிலப்பகுதிக்குச் செல். அங்கு நான் உனக்குக் காட்டும் மலைகளில் ஒன்றின் மேல் எரி பலியாக அவனை நீ பலியிடவேண்டும்” என்றார். ஆபிரகாமுக்குக் கடவுள் குறிப்பிட்டுச் சொல்லிய இடத்தை அவர்கள் அடைந்தனர். அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடம் அமைத்து அதன்மேல் விறகுக் கட்டைகளை அடுக்கி வைத்தார். பின் தம் மகன் ஈசாக்கைக் கட்டி, பீடத்தின் மீதிருந்த விறகுக் கட்டைகளின் மேல் கிடத்தினார். ஆபிரகாம் தம் மகனை வெட்டுமாறு தம் கையை நீட்டிக் கத்தியைக் கையிலெடுத்தார். அப்பொழுது ஆண்டவரின் தூதர் வானத்தினின்று ”ஆபிரகாம்! ஆபிரகாம்” என்று கூப்பிட, அவர் ”இதோ! அடியேன்” என்றார். அவர், ”பையன்மேல் கை வைக்காதே் அவனுக்கு எதுவும் செய்யாதே் உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்து கொண்டேன்” என்றார். அப்பொழுது ஆபிரகாம் தம் கண்களை உயர்த்திப் பார்த்தார். இதோ, முட்செடிகளில் கொம்பு மாட்டிக்கொண்டு நின்ற ஓர் ஆட்டுக்கிடாயைக் கண்டார். உடனே ஆபிரகாம் அங்குச் சென்று அந்தக் கிடாயைப் பிடித்துத் தம் மகனுக்குப் பதிலாக எரி பலியாக்கினார்.

**பதில்பாடல் :** உயிர் வாழ்வோர் நாட்டில் நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்

## இரண்டாம் வாசகம் : உரோமையர் 8:31-34

சகோதர சகோதரிகளே! இதற்குமேல் நாம் என்ன சொல்வோம்? கடவுள் நம் சார்பில் இருக்கும்போது, நமக்கு எதிராக இருப்பவர் யார்? தம் சொந்த மகனென்றும் பாராது அவரை நம் அனைவருக்காகவும் ஒப்புவித்த கடவுள், தம் மகனோடு அனைத்தையும் நமக்கு அருளாதிருப்பாரோ? கடவுள் தேர்ந்து கொண்டவர்களுக்கு எதிராய் யார் குற்றம் சாட்ட இயலும்? அவர்கள் குற்றமற்றவர்கள் எனக் காட்டுபவர் கடவுளே. அவர்களுக்கு யார் தண்டனைத் தீர்ப்பு அளிக்க இயலும்? இறந்து, ஏன், உயிருடன் எழுப்பப்பட்டு கடவுளின் வலப் பக்கத்தில் இருக்கும் கிறிஸ்து இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறார் அன்றோ!

## நற்செய்தி : மாற்கு 9 : 2 – 10

அக்காலத்தில் இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு அவர்களைமட்டும் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார்.அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்த சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெள்ளை வெளேரென ஒளிவீசின.அப்போது எலியாவும் மோசேயும் அவர்களுக்குத் தோன்றினர். இருவரும் இயேசுவோடு உரையாடிக் கொண்டிருந்தார்கள்.பேதுரு இயேசுவைப் பார்த்து, ”ரபி, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்” என்றார்.தாம் சொல்வது என்னவென்று அவருக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் மிகுந்த அச்சம் கொண்டிருந்தார்கள்.அப்போது ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட அந்த மேகத்தினின்று, ”என் அன்பார்ந்த மைந்தர் இவரே் இவருக்குச் செவிசாயுங்கள்” என்று ஒரு குரல் ஒலித்தது.உடனடியாக அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். தங்கள் அருகில் இயேசு ஒருவரைத் தவிர வேறு எவரையும் காணவில்லை.அவர்கள் மலையிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த போது அவர், ”மானிட மகன் இறந்து உயிர்த்தெழும் வரை, நீங்கள் கண்டதை எவருக்கும் எடுத்துரைக்கக் கூடாது” என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் இவ்வார்த்தையை அப்படியே மனத்தில் இருத்தி, ”இறந்து உயிர்த்தெழுதல்” என்றால் என்னவென்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள்.

**தியானம்:** ஆண்டவரை நான் எந்நாளும் என் கண்முன் வைத்திருக்கின்றேன் எனவே நான் அசைவுறேன் (தி.பா.16:8) என்று தாவீது அரசர் பாடுவதைப்போல நம்மில் பலரும் கடவுளை நம்முடைய துணையாகக் கொண்டு நமது வாழ்வை வாழும் போதும் நமக்கு சில நேரங்களில் நெருக்கடிகளும் சோதனைகளும் வேதனைகளும் சறுக்கல்களும் வரும் போது நமது நம்பிக்கையை தளரவிட்டுவிடுகின்றோம். நாம் பல வேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்பட வேண்டும். (தி.ப.14:22) என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பதினோரு நாட்களில் நடந்து அடைய வேண்டிய ஒரேபு மலையை அடைய கடவுள் இஸ்ராயேல் மக்களை 40ஆண்டுகள் பாலைநிலத்தில் அலைக்கழித்தார். அவர்களுக்கு பசியையும், தாகத்தையும் கொடுத்து அவர்களைச் சோதித்தார். ஏனெனில் துன்பங்கள் வழியாகத்தான் ஒரு மனிதன் பக்குவப்படுத்தப்படுகின்றான். துன்பங்கள் வழியாகத்தான் மனிதன் வாழ்வை வாழ பழகிக் கொள்கின்றான். புயல் அடிக்கும் போதுதான் மரத்தின் வேர் ஆழமாகச் சென்று தன்னை நிலைநிறுத்திக் கொள்கின்றது. எனவேதான் சுனாமிகள் வரும்போது அதனால் தாக்குப்பிடிக்க முடிகின்றது. மனிதனுடைய துன்பங்கள் வேதனைகள் மத்தியிலும் கடவுள் அவனோடுதான் பயணமாகின்றார், அவனோடுதான் இருக்கின்றார் என்பதை நாம் ஒருநாளும் மறந்துவிடக்கூடாது. ஏனெனில் துன்பங்கள் எல்லாம் இறைவனின் சாபங்கள் என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். துன்பங்கள் வழியாகத்தான் கடவுள் மனிதர்களை மாட்சிமைக்குத் தயார் செய்கின்றார். சிலுவைகள்தான் உயிர்ப்பின் தொடக்கம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. “உங்கள் கடவுளாகிய ஆண்டவர் பாலை நிலத்தில் உங்களைக் கூட்டிச்சென்ற எல்லா வழிகளையும் நினைவில் கொள்ளுங்கள். அதன் மூலமே அவர் உங்களை எளியவராக்கினார். அவர்தம் கட்டளைகளை கடைபிடிப்பீர்களா மாட்டீர்களா என உங்கள் உள்ளச் சிந்தனைகளை அறிந்துகொள்ளவும் சோதித்தார். இந்த நாற்பது ஆண்டுகளும் உங்கள் மேலுள்ள ஆடை நைந்து போகவில்லை உங்கள் காலடிகள் வீங்கவும் இல்லை. ஒருவன் தன் மகனுக்குக் கற்றுக் கொடுப்பதுபோல உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கற்றுக் கொடுத்தார் என்பதை உங்கள் உள்ளத்தில் உணர்வீர்களாக. உங்களுக்கு நல்லது செய்வதற்காக உங்களை எளியவராக்கிச் சிறுமைப்படுத்திச் சோதித்தவரும் அவரே.” (இ.ச.8:2,4,16) நமக்கு மகிமையான விண்ணகம் சொந்தமாக வேண்டுமென்பதற்காக நமது ஆன்மாக்களை சுத்தப்படுத்த கடவுள் நம்மை சோதிக்கின்றார். எனவே இவ்வுலகில் நாம் சந்திக்கும் சவால்களை, துன்பங்களை, சோதனைகளை ஆபிரகாம் போன்று விசுவாசத்தில் எதிர் கொள்வோம், இயேசுவைப் போல கடவுளின் மாட்சியில், உயிர்ப்பில் பங்கு பெறுவோம்